பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

27 11 2026 FRIDAY 7.15 PM

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை எட்டுவதில் ஆயுர்வேத மருத்துவம் முக்கிய பங்கு வகிப்பதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

2. மத்திய அமைச்சரவைக்கூட்டம் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் இன்று புதுதில்லியில் நடைபெற்றது.

3. கடல்சார் வர்த்தகத்துக்கு எதிரான தாக்குதல்கள் கண்டிக்கத்தக்கது என்று வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

4. தமிழகத்தில் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை மேம்படுத்த ஆயிரத்து 37 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

5. பிம்ஸ்டெக் 23 வயதுக்கு உட்பட்டோருக்கான தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று, 2 தங்கம், 5 வெள்ளி, 3 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை எட்டுவதில் ஆயுர்வேத மருத்துவமும் முக்கிய பங்கு வகிப்பதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

கேரளம் மாநிலம் திருச்சூரில் வைத்தியரத்னம் ஆயுர்வேத கல்லூரியின் பொன்விழா கொண்டாட்டங்களில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

ஆயுர்வேதத்தை உலக அளவில் பிரபலப்படுத்துவதில் கேரளம் இன்றியமையா பங்கு வகித்து வருவதாகவும் குடியரசுத் தலைவர் தெரிவித்தார்.

<<<<<>>>>>

மத்திய அமைச்சரவைக்கூட்டம் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் இன்று புதுதில்லியில் நடைபெற்றது.

தொகுதி மறுவரையறையுடன் கூடிய மகளிர் இடஒதுக்கீடு திருத்த மசோதாவிற்கு இக்கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டதாக அதிகார வட்டாரங்களை மேற்கோள்காட்டி பிடிஐ தெரிவித்துள்ளது.

இந்த மசோதா வரும் திங்கட்கிழமை தொடங்கவுள்ள நாடாளுமன்ற சிறப்பு அமர்வில் தாக்கல் செய்யப்படும் என்றும் பிடிஐ கூறியுள்ளது.

<<<<<>>>>>

கடல்சார் வர்த்தகத்துக்கு எதிரான தாக்குதல்கள் கண்டிக்கத்தக்கது என்று வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், இப்பிரச்சினைக்கு தீர்வுகாண உலகளாவிய நடவடிக்கை அவசியமாகிறது என்று தெரிவித்தார்.

தீவிரவாதம், போதைப்பொருள் தடுப்பு மற்றும் இயற்கை பேரிடர்களை எதிர்கொள்வதிலும் சர்வதேச நாடுகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று டாக்டர் ஜெய்சங்கர் கேட்டுக்கொண்டார்.

<<<<<>>>>

பாதுகாப்புத்துறையில் சுயசார்பு என்பது வெறும் முழக்கம் அல்ல என்றும், எதிர்கால சவால்களை எதிர்கொள்வதற்கு அவசியமானது என்றும் முப்படைகளின் தளபதி ஜென்ரல் ராஜா சுப்பிரமணி கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், பாதுகாப்பு சவால்களை எதிர்கொள்ள நவீன தொழில்நுட்பங்கள் கூடுதலாக பயன்படுத்தப்பட வேண்டும் என்றார்.

நமது பாதுகாப்புப் படையிரின் திறனை ஆபரேஷன் சிந்தூர் உலகிற்கு உணர்த்தியதாகவும் ஜென்ரல் ராஜா சுப்பிரமணி தெரிவித்தார்.

<<<<<>>>>

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் சிறு-குறு தொழில்துறை முக்கிய பங்கு வகிப்பதாக ரிசர்வ் வங்கி கவர்னர் திரு சஞ்சய் மல்ஹோத்ரா தெரிவித்துள்ளார்.

இன்று மும்பையில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சியில் **31** சதவீதத்தை சிறு-குறு தொழில்துறை கொண்டிருப்பதாக கூறினார்.

பல்வேறு நாடுகள் உடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், இந்த துறையின் வளர்ச்சிக்கு மேலும் உத்வேகம் அளிக்கும் என்றும் திரு சஞ்சய் மல்ஹோத்ரா தெரிவித்தார்.

<<<<<>>>>>

இந்தியா — மலேசியா இடையேயான கூட்டு ராணுவப் பயிற்சி **IPOH** நகரில் நடைபெற்று வருகிறது.

இருநாடுகளுக்கு இடையேயான ராணுவ ஒத்துழைப்பை வலுப்படுத்தும் நோக்கில் இந்த பயிற்சி நடைபெற்று வருகிறது.

இரு நாடுகளின் சார்பில் தலா **120** பேர் இப்பயிற்சியில் பங்கேற்றுள்ளனர்.

கடந்த 19-ஆம் தேதி தொடங்கிய இந்த பயிற்சி, வரும் திங்கட்கிழமை நிறைவடைய உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>

இந்தியா — ஐரோப்பிய யூனியன் உடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் பிரதமர் திரு நரேந்திர மோடியின் Brussels பயணத்தின்போது கையெழுத்திடப்பட உள்ளதாக இந்தியாவுக்கான ஐரோப்பிய யூனியன் தூதர் திரு Jean Eric Paquet கூறியுள்ளார்.

செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்த அவர், அடுத்த 16-ஆம் தேதி இந்த ஒப்பந்தம் கையெழுத்தாக உள்ளதாக தெரிவித்தார்.

பின்னர் இந்த ஒப்பந்தம் நாடாளுமன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படும் என்றும் திரு Jean Eric Paquet கூறினார்.

<<<<<>>>>>

தேசிய பல்லுயிர் ஆணையம், மருத்துவ தாவரங்கள் பாதுகாப்பிற்காக 13 கோடியே 76 லட்சம் ரூபாயை விடுவித்துள்ளது.

இதில் தமிழகத்திற்கு மட்டும் 60 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<>>>>>

தமிழகத்தில் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை மேம்படுத்த ஆயிரத்து **37** கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதியின்கீழ், **340** சாலைகள் மேம்படுத்தப்பட உள்ளதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

சாலைகளின் நிலை, மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்களின் கோரிக்கைகளின் அடிப்படையில் இந்த சாலைகள் தேர்வு செய்யப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

கர்நாடகாவில் தேர்வு நடைபெறும் நேரங்களில் ஆசிரியர்கள் மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட மாட்டார்கள் என்று அம்மாநில பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு **Madhu Bangarappa** கூறியுள்ளார்.

இன்று பெங்களூருவில் ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்பில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

தேர்வுகள் நடைபெற உள்ளதால் ஆசிரியர்களை இதரப்பணிகளுக்கு பயன்படுத்தக் கூடாது என்று அமைச்சரவைக்

கூட்டத்தில் வலியுறுத்த உள்ளதாகவும் திரு **Madhu Bangarappa** கூறினார்.

<<<<<>>>>>

மகாராஷ்ட்ராவில் முதலீடு செய்ய முன்வருமாறு ஜெர்மனி நிறுவனங்களுக்கு அம்மாநில முதலமைச்சர் திரு தேவேந்திர பட்நவிஸ் அழைப்பு விடுத்துள்ளார்.

இன்று மும்பையில் ஜெர்மன் பிரதிநிதிக் குழுவினருடன் மேற்கொண்ட ஆலோசனையின்போது அவர் இக்கோரிக்கையை விடுத்தார்.

கல்வித்துறையிலும் ஒத்துழைப்பை வலுப்படுத்த தேவையான அனைத்து உதவிகளை தமது அரசு வழங்கும் என்றும் திரு தேவேந்திர பட்நவிஸ் கூறினார்.

<<<<<>>>>>

திரிபுரா நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலுக்கான வாக்குப்பதிவு இன்று நடைபெற்று முடிந்தது.

16 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு நடைபெற்ற இந்த தேர்தலில் **78** சதவீத வாக்குகள் பதிவானதாக முதல்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐந்து இடங்களில் பிஜேபி போட்டியின்றி வெற்றிபெற்றுள்ளது.

வாக்குப்பதிவின்போது பல்வேறு இடங்களில் வன்முறை சம்பவங்கள் நடைபெற்றதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

<<<<<>>>>>

கேரளத்தில் காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் இடையே நிலவும் கருத்து வேறுபாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டியது அவசியம் என்று அக்கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும், மாநில அமைச்சருமான திரு ரமேஷ் சென்னிதாலா கூறியுள்ளார்.

இன்று திருவனந்தபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கருத்து வேறுபாடுகளை களைந்து அனைத்துத் தரப்பினரும் ஒருமித்து பணியாற்ற வேண்டியது அவசியம் என்றும் தெரிவித்தார்.

<<<<<>>>>>

கோவா சர்வதேச திரைப்பட விழா உலகளாவிய திரைப் பிரபலங்களை ஒருங்கிணைக்கும் நிகழ்வாக உள்ளது என்று நடிகர் **Gordhan Singh** கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் இதனை தெரிவித்த அவர், கடந்த நான்கு ஆண்டுகளாக இந்த திரைப்பட விழாவில தாம் பங்கேற்று வருவதாக தெரிவித்தார்.

சர்வதேச திரைப்பட தயாரிப்பாளர்கள் மற்றும் இயக்குநர்களோடு திரைப்படத்துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து விவாதிப்பதற்கான வாய்ப்பை இந்த திரைப்பட விழா ஏற்படுத்தித் தந்துள்ளதாகவும் நடிகர் **Gordhan Singh** கூறினார்.

<<<<<>>>>>

பிம்ஸ்டெக் **23** வயதுக்கு உட்பட்டோருக்கான தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று, இரண்டு தங்கம், ஐந்து வெள்ளி, மூன்று வெண்கலப்பதக்கங்களை வென்றது.

புவனேஷ்வரில் நடைபெற்றுவரும் இப்போட்டியின், ஆடவர் **800** மீட்டர் ஓட்டத்தில் **Shyam Milan Bind** தங்கப் பதக்கத்தையும், **600** மீட்டர் ஓட்டப்பிரிவில் யுவராஜ் வெள்ளிப் பதக்கத்தையும் வென்றனர். மகளிர் குண்டு எறிதலில் **Anshu** தங்கப் பதக்கத்தையும், **Riya Verma** வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர்.

மகளிர் **400** மீட்டர் தடை ஓட்டத்தில் **Priyanka Madiva Olekar** வெள்ளிப்பதக்கத்தையும், **Sonam** வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

மகளிர் **800** மீட்டர் ஓட்டப்பிரிவில் **Prateekasha Yadav** வெள்ளிப்பதக்கத்தையும், லஷ்மி பிரியா கிஷன் வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

ஆடவர் நீளம் தாண்டுதலில் **Sharon Jestus** வெண்கலப்பதக்கம் வென்றார்.

ஆடவர் **400** மீட்டர் தடை ஓட்டத்தில் **Aryan Prajwal Kashayapa** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை **16** தங்கம், **18** வெள்ளி, ஏழு வெண்கலப் பதக்கங்களுடன் பதக்கப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.

தாய்லாந்து பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Munna Khalid — Shashank Kumar** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, **15-4, 15-8** என்ற செட் கணக்கில், ஆஸ்திரேலியாவின் **Grant Manzoney** — தாய்லாந்தின் **Anuwat Sriboran** இணையை வென்றது.

மகளிர் இரட்டையர் பிரிவில் **Alphia James — Pallavi Kalluvehalli** இணையும் அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளது.

Crucible கோப்பைக்கான ஸ்னூக்கர் போட்டியில் இந்தியாவின் பங்கஜ் அத்வானி பட்டம் வென்று, வரலாற்றுச் சாதனை படைத்தார்.

இங்கிலாந்தில் நடைபெற்ற இப்போட்டியின் இறுதி ஆட்டத்தில் அவர், **6-0** என்ற புள்ளிக்கணக்கில் மால்டாவின் **Tony Drago**-வை வென்றார்.

ஜப்பானில் நடைபெற்றுவரும் **Yokohama Keio** சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் அனிருத் சந்திரசேகர் - நெதர்லாந்தின் **Thijmen Loof** இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

ஆசிய சாம்பியன் கோப்பை மகளிர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா — மலேசியா இடையேயான அரையிறுதி ஆட்டம் போபாலில் தற்போது நடைபெற்று வருகிறது.

போபாலில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் கரண் சிங் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

கொல்கத்தாவில் நடைபெற்ற சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் **Ayaan Vaziralli** பட்டம் வென்றார்.

ஆஸ்திரேலியன் ஓபன் டென்னிஸ் போட்டியின் பிரதான சுற்றில் பங்கேற்க இந்தியாவின் **Arjun Kadhe — Siddhant Banthia** இணை தகுதி பெற்றுள்ளது.

உலகக்கோப்பை இளையோர் ஐவர் ஹாக்கிப் போட்டிக்கான அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

இப்போட்டி, எகிப்தின் கெய்ரோவில் அடுத்த மாதம் **9**-ஆம் தேதி தொடங்கி, **12**-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

இந்தியா முதல் போட்டியில் பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

ஐ பி எல் கிரிக்கெட் போட்டிகளுக்கான மும்பை அணியின் கேப்டனாக ரோஹித் சர்மா மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

<<<<<END>>>>>